# தஞ்சாவூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

## ந.க.எண்.2678/அ1/2024, நாள்.28.08.2024.

***********

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப் பணி – தஞ்சாவூர் மாவட்டம் 15.03.2024 நிலவரப்படியான முன்னுரிமைப் பட்டியல் – பொதுசார்நிலைப் பணியான பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்கி ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை: 1.அரசாணை (நிலை) எண்.33, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்.06.04.2018.
2.அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக்கல்வித்(வரவுசெலவு–1) துறை நாள்.09.09.2022.
3.தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் சென்னை–06, ந.க.எண்.77233/அ4/இ1/2018, நாள்.06.12.2018.
4.தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் சென்னை–06, ந.க.எண்.30000/அ4/இ1/2024, நாள்.18.06.2024, 25.07.2024 மற்றும் 12.08.2024.
5.தஞ்சாவூர், முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.2678/அ1/2024, நாள்.10.04.2024, 15.05.2024, 11.06.2024 மற்றும் 13.08.2024
6.சம்மந்தப்பட்டப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆய்வு அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்

***********

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அலுவலகங்கள் மற்றும் அரசு / நகராட்சி / மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியின் கீழுள்ள பதிவறை எழுத்தர்களுக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழுள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்க 15.03.2024 நிலவரப்படி தயாரிக்கப்பட்ட தேர்ந்தோர் முன்னுரிமைப் பட்டியலின்படி, கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில், இளநிலை உதவியாளராக பணிமாறுதல் மூலம் பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்படுகிறது.

| முன்னுரிமை ஆண்டு மற்றும் எண் | பெயர், பதவி மற்றும் பள்ளி / அலுவலகம் (திருவாளர்கள்) | இளநிலை உதவியாளராக பதவி உயர்வு அளித்து மாறுதல் வழங்கப்படும் பள்ளி /அலுவலகம் |
|---|---|---|
| 15.3.2024<br>வ.எண்.20 | மு.வீரம்மாள்,<br>பதிவறை எழுத்தர்,<br>வட்டாரக் கல்வி அலுவலகம்,<br>திருவிடைமருதூர். | வட்டாரக் கல்வி அலுவலகம்,<br>ஒரத்தநாடு. |

### நிபந்தனைகள்:

1) இப்பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவர். தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அடிப்படை பயிற்சியினையும், தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் கண்டிப்பாக தேர்ச்சி பெறவேண்டும்.
2) இப்பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தல் ஆணை பெற்ற பிறகே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்பட வேண்டும்.
3) தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் அரசாணை (நிலை) எண்.90, நிதி (ஊதியக்கட்டு) துறை நாள்.26.02.2021–ன்படி, 19,500–71,900 (8–ல்) ஊதியம் மற்றும் இதரப்படிகள் பெறத் தகுதியுடையவர் ஆவார்.
4) மேற்கண்ட பணியாளர் தனது பதவி உயர்வினை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ துய்க்க விரும்பினால் 7 நாட்களுக்குள் தனது விருப்பத்தினை தெரிவிக்கப்பட வேண்டும்.
5) நிர்வாக காரணங்களினால் பணியிறக்கம் செய்ய நேரிடும் பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணியிறக்கம் செய்யப்படும்.
6) சார்ந்த பணியாளர் பணிவிடுப்பு மற்றும் பணியேற்ற விவரத்தினையும் உடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர் / அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக்கல்வி அலுவலர்,
தஞ்சாவூர்.

பெறுநர் :

மு.வீரம்மாள்,
பதிவறை எழுத்தர்,
வட்டாரக் கல்வி அலுவலகம்,
திருவிடைமருதூர். (உரிய வழியாக).

நகல்: 1.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) சென்னை–6, அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2.மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி), தஞ்சாவூர்/பட்டுக்கோட்டை.
3.வட்டாரக் கல்வி அலுவலர், திருவிடைமருதூர் /ஒரத்தநாடு.

வட்டார கல்வி அலுவலர்
ஒரத்தநாடு-614 625